முருகப்பெருமான் துணை

**மகான் சுந்தரானந்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

22.06.2023, வியாழக்கிழமை

1. அருட்பெருஞ் சக்தி வடிவான
அண்ணலே ஞான குருவே
வருங்காலம் ஞானவான்கள் தனை
வையகம் முழுக்க நிரம்பி இருக்க
2. இருக்கவே தவ தரும ஆற்றலை
எல்லோருக்கும் ஞானமாகத் தரும்
ஆறுமுக அரங்கனே உமை போற்றி
அறிவிப்பேன் சோபகிருது மிதுன திங்கள்
3. திங்களிலே சப்தமதிகதி குருவாரம்
(சோபகிருது வருடம் ஆனி மாதம் 07 ம் நாள், 22.06.2023, வியாழக்கிழமை)
தேசிகன் கேட்க அறிவுரை ஆசி
இங்கனமே சுந்தரானந்தர் யானும்
இயம்புவேன் உலகநலம் பெற
4. நலம் பெற ஞான பலம் பெற
நம்பிக்கையான வாழ்வும் பெற
வலம்வர வேணும் பிரணவக் குடிலை
வணங்கி ஞானியர் ஆசிபெற
5. ஆசிபெற கருமா விலகி
ஆன்மா சுத்தி பெறக் கூடும்
வாசி வென்ற ஞானிகள் பேரில்
வருமுலகில் நித்ய பூசைதொடர
6. தொடரவே தேகமனம் சுத்தி
தெய்வ பலமாக வந்து நிகழும்
இடரான மண் பொன் பெண்
இழிவான பேராசை மாயை கடந்து

7. கடந்து மனவடக்கம் தன்னை
கருணைமிக்க ஞானியர்செபம்
நடத்திக் காத்து வாழ்விலே
ஞானபலமோடு வாழ வைக்கும்
8. வைக்குமே எந்தப் பற்றுவழியும்
வதைகாணா மீட்புத் தந்து
தேக்கமின்றி குருவின் வழியை
தொடர்ந்துவர அருள் செய்யும்
9. செய்யும் குருவருள் பலமாக
சிறப்பறிவு தனையும் ஊட்டி
அய்யம் கொள்ளா உண்மை வழியை
அகலாத் தொடர்ந்து வரவகை செய்யும்
10. வகையான ஞானிகள் பலம்
வருங்காலம் பேருலகம் தன்னில்
பகைமை கயமை தீமையின்றி
பண்பு பரிவு பக்குவம் தெளிவு என
11. என நல்வழிகளையே காட்டி
இழுக்கு அவப்பேரு காணா
ஞானவான்களாய் தேற்றி மீட்கும்
நாட்டிவந்த அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—